# விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

## கற்றல் பயிற்சித்தாள்

## தமிழ்

**வகுப்பு: இரண்டு**

**I. பொருள் தருக:**

1) விண் - வானம்
2) விழுச்செல்வம் - சிறந்த செல்வம்
3) சவாரி - பயணம்
4) சாந்தம் - அமைதி

**II. பிரித்து எழுதுக:**

1) சொல்லெடுத்து = சொல் + எடுத்து
2) காய்கனிகள் = காய் + கனிகள்

**III. எதிர்ச்சொல் தருக:**

1) ஆண் × பெண்
2) ஒற்றுமை × வேற்றுமை
3) அகிம்சை × வன்முறை

**IV. விடுபட்ட எழுத்துகளை நிரப்புக:**

1) எண்ணென்ப
2) விழுச்செல்வம்
3) அருவி
4) குளம்

**V) கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1. கண்ணில் ஒளியாய்க் கலந்தவனை.
2. அழிவில்லாத செல்வம் கல்வி.
3. குற்றாலம் தென்காசி மாவட்டத்தில் உள்ளது.
4. மலைகளின் இராணி ஊட்டி.
5. மகாத்மா காந்தி அவர்கள் குஜராத் மாநிலத்தில் பிறந்தார்.

6. காமராஜர் <u>கல்வி</u> புரட்சி செய்தார்.

**VI) கீழ்காணும் சொற்களைத் "தகர" வரிசையில் எழுதுக:**

(திருநாள், தோகை, தாய், தும்பை, தந்தை, தீமை, தொடக்கம், தௌ, தூதர், தையல், தேன், தெளிவு)

| | | |
|---|---|---|
| த- தந்தை | தா- தாய் | தி- திருநாள் |
| தீ- தீமை | து- தும்பை | தூ- தூதர் |
| தெ- தெளிவு | தே- தேன் | தை- தையல் |
| தொ- தொடக்கம் | தோ- தோகை | தௌ- தௌ |

**VII) அந்தாதி அமைக்க:**

1. குரங்கு - குடை 2. வைகாசி - சிங்கம் 3. சிந்து - தும்பி

**VIII) கீழ்காணும் ஒருமைச் சொற்களை பன்மைச் சொற்களாக மாற்றி எழுதுக:**

1. குழந்தை - <u>குழந்தைகள்</u>
2. ஆடு - <u>ஆடுகள்</u>
3. காய் - <u>காய்கள்</u>

**IX) ந, ண, ன - வேறுபாடு அறிந்து சரியான சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) ஆண்கள் <u>பெண்கள்</u> வரிசையில் நிற்கக்கூடாது. (பென்கள்/ பெண்கள்)

2) மல்லிகை <u>மணம்</u> வீசியது. (மனம் / மணம்)

**X) ல, ள, ழ - வேறுபாடு அறிந்து சரியான சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக:**

1) <u>பல்லி</u> சுவற்றின் மேல் ஓடியது. (பள்ளி / பல்லி)

2) வயல் <u>செழிப்பாக</u> இருந்தது. (செழிப்பாக / செலிப்பாக)

XI) **படத்தைப் பார்த்து பெயரை எழுதுக:**







ரோஜா வீடு காகம் பூனை நாய்

XII) **வினாவிற்கு விடையளிக்க**:

1. இறைவன் எவ்வாறு கலந்திருப்பான்?
   கண்ணில் பார்வை போலக் கலந்து இருப்பான்.
2. அழிவில்லாத உயர்ந்த செல்வம் எது?
   அழிவில்லாத உயர்ந்த செல்வம் கல்வி.
3. குற்றாலம் எங்குள்ளது?
   குற்றாலம் தென்காசி மாவட்டத்தில் உள்ளது.
4. குற்றாலத்திற்கு யார் யார் பயணம் செய்தனர்?
   குற்றாலத்திற்கு அப்பா, அம்மா, வெற்றி பயணம் செய்தனர்.
5. நம் இந்திய திருநாடு எவற்றால் வேறுபட்டுக் கிடந்தது?
   நம் இந்திய திருநாடு சாதியால், இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்டு கிடந்தது.